RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 185 | ஜூலை.11 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ‘மக்களே இடைத்தேர்தலில் தீய சக்தி திமுகவை நல்லா வெச்சு வெளுத்து விடுங்க’

## கரூரில் முதலமைச்சர் விஜய் பேச்சு

சென்னை: ஜூலை.11-

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், கரூரில் அரசு மற்றும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று கரூர் செல்கிறார்.

சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் திருச்சிக்கு செல்லும் அவர், அங்கிருந்து சாலை மார்க்கமாக கரூர் செல்கிறார். கரூரின் முக்கிய பகுதிகளான திருகாம்பலியூர் பைபாஸ், பழைய பேருந்து நிலையம், ரவுண்டானா, உழவர் சந்தை மற்றும் காங்கேயம் சாலை வழியாக சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு முதலமைச்சரின் ரோடு ஷோ நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 27 அன்று கரூரில் நடைபெற்ற தவெக மாநாட்டு கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினரை முதலமைச்சர் விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் கூறுகிறார். மேலும், தகுதியுடைய 32 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் அரசுத் துறைகளில் பணி நியமன ஆணைகளையும் அவர் வழங்குகிறார்.

கரூர்சேலம் பைபாஸ் சாலையில் உள்ள வெண்ணெய்மலை அட்லஸ் கலையரங்க மைதானத்தில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்கும் மக்கள் சந்திப்பு மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் முதலமைச்சர் விஜய் உரையாற்றுகிறார்.

தாந்தோணிமலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் அரசு விழாவில் பல்வேறு துறைகளின் கீழ் பயனாளிகளுக்குப் பலகோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வானவாசி ஊராட்சியில்,



சுமார் ரூ.1,700 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள தனியார் தோல் சாரா காலணி தயாரிப்பு தொழிற்சாலைக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டுகிறார். இத்திட்டத்தின் மூலம் சுமார் 13,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலமைச்சரின் வருகையையொட்டி கரூர் மற்றும் அண்டை மாவட்டங்களில் இருந்து 6,500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொதுக்கூட்ட மைதானம் மற்றும் முதலமைச்சர் செல்லும் வழிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தீவிர மோப்ப நாய் சோதனைகளும் நடத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சர் விஜய் சாலைவலம்

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை முடித்துக் கொண்ட முதலமைச்சர் விஜய் அங்கிருந்து தான்தோன்றி மலை பகுதியில் உள்ள மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு சாலை வலமாக இருசக்கர வாகனத்தில் சென்றார். அவர் செல்லும் வழியில் இரு புறமும் நின்ற மக்கள், திறந்த வேனில் நின்றபடி வந்த முதலமைச்சர் விஜய்க்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

செந்தில் பாலாஜி, எ.வ.வேலுவை விமர்சித்த முதலமைச்சர் விஜய்

மேலும் பேசிய முதலமைச்சர் விஜய், "கரூர் கம்பெனி என்ற பெயரில் கோடி கோடியாக கொள்ளை அடித்த ஒருவர் இப்போது எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை. ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார். இன்னொருவர் வெளிநாட்டில் பதுங்கிக் கொண்டுள்ளார். அது திமுக தலைவர் ஸ்டாலின் இல்ல. திமுக தலைவர் ஸ்டாலின் சார் மீது எனக்கு எப்போதும் மரியாதை உண்டு.

ஆட்சியில் இருக்கும் போது தான் எங்களுக்கு திமுகவினர் கட்டுப்பாடு போட்டனர். இப்போது தவெக ஆட்சிக்கு வந்த பிறகும், திமுகவினர் எங்களுக்கு கட்டுப்பாடு போட முயற்சிக்கின்றனர். நான் கரூருக்கு போகக் கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்கு போடுகிறார். இந்த விஷயதத்தில் உச்ச நீதிமன்றம் அவர்களுக்கு நல்ல பாடம் கற்றுத் தந்துள்ளது.

வரும் இடைத்தேர்தலில் தீய சக்தி திமுகவை நல்லா வெச்சு வெளுத்து விடுங்கள். நம்பிக்கையுடன் இருங்க... நல்லதே நடக்கும்" என்று பேசி தனது உரையை முதலமைச்சர் விஜய் நிறைவு செய்தார்.

## கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைச்சர் அருண்ராஜ் ஆய்வு

கரூர்: ஜூலை.11-

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் ஆய்வு மேற்கொண்டார்.



கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று (ஜூலை 10) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் ஆய்வு மேற்கொண்டார். வெளிநோயாளிகள் பதிவு செய்யும் இடம், முதல் தளத்தில் உள்ள வெளிநோயாளிகள் பிரிவு, ஆண்கள் கழிவறையை பார்வையிட்ட அமைச்சர் அருண்ராஜ், கழிவறை சுத்தமாக இல்லாதது குறித்து அதிருப்தி தெரிவித்து பராமரிப்பு சார்ட் குறித்து கேட்டார்.

மேலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனத்தை பொறுப்பாளரிடம் விசாரணை செய்தார். மேலும் பெண்கள் கழிவறையை எம்.பி. செ.ஜோதிமணி, கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ எம்.சத்யா ஆகியோர் பார்வையிட அறிவுறுத்தினார். 6வது தளத்தில் உள்ள பெண்கள், ஆண்கள் பொது அறுவை சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவினை பார்வையிட்டார்.

பொது அறுவை சிகிச்சை செயல் விளக்கக் கூடத்தில் இருந்த மாணவ, மாணவிகளிடம் விடுதி, மெஸ் வசதி உள்ளிட்டவைகள் குறித்து கேட்டறிந்தார்.

ஆய்வின் போது ஆட்சியர் சி.முத்துக்குமரன், கரூர் எம்.பி. செ.ஜோதிமணி, கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ எம்.சத்யா, கல்லூரி முதல்வர் பாரதிமோகன், மருத்துவர் ராஜா, தவெக மாவட்ட செயலாளர்கள் வி.பி.மதியழகன் (மேற்கு), பாலசுப்பிரமணியன் (கிழக்கு) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கரூர் கூட்டநெரிசலில் சிக்கி உயிரிழந்தோருக்கு நிபந்தனையின் கீழ் அரசு வேலை வழங்கலாம் : நீதிமன்றம் உத்தரவு

மதுரை: ஜூலை.11-

கரூர் கூட்டநெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களுக்கு நிபந்தனையின் கீழ் அரசு வேலை வழங்கலாம் என உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 27 அன்று நடைபெற்ற தவெக பொதுகூட்டத்தில் ஏற்பட்ட திடீர் கூட்டநெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இவர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்த 32 பேருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. இன்று கரூரில் நடைபெறுகிற விழாவில் பங்கேற்கும் முதலமைச்சர் விஜய், இந்த அரசு பணி நியமன ஆணைகளை வழங்குகிறார்.



இதனிடையே, கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்கக்கூடாது என பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. நாம் தமிழர் கட்சியை சேர்ந்த தீரன் திருமுருகன், மனிதநேய ஜனநாயக கட்சியின் மாநில நிர்வாகி சீனி அஹமது ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதிகள் சி.வி. கார்த்திகேயன், சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வின் முன்பு இன்று காலை 10.45 மணியளவில் விசாரணைக்கு வந்தன.

அப்போது, கரூரில் 41 பேர் பலியான சம்பவம் குறித்த வழக்கானது உச்ச நீதிமன்றத்தில் நீதி அரசர் முன்பாக, சிபிஐ விசாரணையில் உள்ளது. இந்த நேரத்தில் இதில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கக்கூடாது என மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

அதில் தற்போதைய அரசு, கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு கருணை அடிப்படையில் அரசு பணிகளை வழங்க திட்டமிட்டுள்ளது. ஆனால் உச்ச நீதிமன்றத்தில் ஏற்கனவே தொடரப்பட்ட இதுபோன்ற வழக்குகளான கும்பகோணம் மகாமகம் சம்பவம், ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு, தருமபுரி பஸ் எரிப்பு சம்பவம் ஆகிய நிகழ்வுகளில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கவில்லை. இதுபோன்ற நிகழ்வுகளுக்கு கருணைப் பணி வழங்குவது விதிகளுக்கு எதிரானது என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

இதனைக் கேட்ட நீதிபதிகள், அரசுப்பணி வழங்குவது குறித்து சட்டசபையில் அறிவித்தீர்களா? என அரசு தரப்பிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு, தூத்துக்குடி ஸ்டெர்லைட் சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது என அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனை பதிவுசெய்துகொண்ட நீதிபதிகள், அரசின் கொள்கை தொடர்பான முடிவில் தலையிட விரும்பவில்லை. இன்று அரசு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெறலாம். ஆனால் தற்காலிகமாகவே பணி வழங்கப்பட வேண்டும் (இந்த விவகாரத்தில் நீதிமன்றம் இறுதி முடிவெடுக்கும் வரை) என்று கூறி வழக்கின் விசாரணையை வரும் 21ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

மேலும், நீதிமன்றம் தானாக முன்வந்து ஜிழிறிஷிஐ வழக்கில் சேர்த்து உத்தரவிட்டுள்ளது.

## ஆட்டோ புதிய கட்டணம் விரைவில் வெளியிடப்படும்: போக்குவரத்துத் துறை அமைச்சர் தகவல்

சென்னை: ஜூலை.11-

தமிழகத்தில் ஓடும் ஆட்டோக்களுக்கு கடந்த 2013ம் ஆண்டு மீட்டர் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்ட நிலையில் 13 ஆண்டுகள் ஆகிவிட்டதால் ஆட்டோ கட்டணத்தை உயர்த்தக்கோரி, ஆட்டோ தொழிற்சங்கங்கள் பல்வேறு கட்ட போராட்டத்தை நடத்தி வருகின்றன.



இந்நிலையில், தமிழகத்தில் ஆட்டோ கட்டணம் மாற்றியமைப்பது தொடர்பாக முத்தரப்புபேச்சுவார்த்தை, கிண்டியில் உள்ள போக்குவரத்து ஆணையரக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தலைமையில் நடந்த கூட்டத்தில், போக்குவரத்து ஆணையர் பாஸ்கர பாண்டியன், தொமுச தலைவர் நடராஜன், தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளனத்தில் செயல் தலைவர் பாலசுப்ரமணியம், உரிமை குரல் ஓட்டுனர் சங்க பொதுச்செயலாளர் ஜாஹிர் ஹுசேன் உட்பட 30 தொழிற்சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், தொழிற்சங்கங்கள் தரப்பில், ஆட்டோவுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ.60ல் இருந்து ரூ.70 ஆக இருக்க வேண்டுமெனவும், அடுத்து ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.30 வரை கட்டணம் நிர்ணயம் செய்யவும் வலியுறுத்தினர்.

மேலும், தனியார் செயலி வாயிலாக இயக்கப்படும் வாடகை வாகனங்களை முறைப்படுத்தவும் வேண்டுகோள் விடுத்தனர். இதேபோல், நுகர்வோர் அமைப்புகளின் நிர்வாகிகள் தரப்பில், ஆட்டோவுக்கு குறைந்தபட்ச கட்டணமாக ரூ.50 நிர்ணயம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அமைச்சர் பார்த்திபன் செய்தியாளர்களிடம் கூறுகையில், “ஆட்டோ ஓட்டுனர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற ஆட்டோவில் மீட்டர் பொருத்தி முதலில் இயக்க இருக்கிறோம்.

இது மக்கள் சம்பந்தப்பட்டது என்பதால் முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்று ஆலோசித்து ஆட்டோ கட்டண நிர்ணயம் விரைவில் அறிவிக்கப்படும்” என்று தெரிவித்தார்.

## காவிரி நீரைப் பெற தமிழக அரசு முயன்று வருகிறது: வேளாண் அமைச்சர் தகவல்

கும்பகோணம்: ஜூலை.11-

மேகேதாட்டில் அணை கட்டாமல் இருப்பதற்கான நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. காவிரி நீர் பெறுவதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது என வேளாண்மை துறை அமைச்சர் வினோத் தெரிவித்துள்ளார்.

கும்பகோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 14 வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்]கு உட்பட்ட பகுதிகளில் ரேஷன் கடை, அங்கன்வாடி கட்டிடம், பள்ளி கட்டிடம் கூடுதல் பள்ளி கட்டிடம், சமையல் கூடம் உள்ளிட்ட 74 நிறைவு பெற்ற, ரூ.13 கோடியே 91 லட்சத்து



15 ஆயிரம் மதிப்பிலான பணிகளை வேளாண்மை துறை அமைச்சர் வினோத் திறந்து வைத்தார்.

பின்னர், திறந்தவெளி நெல் கிடங்கில் நெல் மூட்டை சரிந்து உயிரிழந்த சின்ன பொண்ணு குடும்பத்திற்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ரூ.2 லட்சம் மற்றும் தமிழக முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் என மொத்தம் ரூ.5 லட்சம் மற்றும் இந்தவிபத்தில் லேசான காயமடைந்த சகுந்தலாவுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் கருணைத்தொகையாக ரூ.25 ஆயிரம் மற்றும் தமிழக முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.75 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளை வழங்கினார்.

இது தொடர்பாக வேளாண்மை துறை அமைச்சர் வினோத் செய்தியாளர்களிடம் பேசுகையில், “தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை கர்நாடக அரசிடம் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். நம் உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம். கண்டிப்பாக தமிழக முதல்வர் பெற்றுத் தருவார். எதிர்க்கட்சித் தலைவர் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருப்பார். அவரது பணியே சொல்லிக் கொண்டிருப்பது தான்.

மேகேதாட்டில் அணை கட்டாமல் இருப்பதற்கான நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. கர்நாடக அரசு பல வருடமாக பலவிதமாக சொல்லிக் கொண்டு வருகிறது. தமிழக அரசு அவ்வளவு சீக்கிரமாக விட்டுக் கொடுத்து விடாது. காவிரி நீர் பெறுவதற்கான முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது,” என அவர் தெரிவித்தார்.

# உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டம்விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

நீலகிரி, ஜூலை.11-

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 18 வயது முதல் 60 வயது வரை உள்ள உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க மானியத் தொகை ரூ.50,000/ வழங்க தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. தற்போது மேற்படி திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் 30.06.2026 லிருந்து 15 நாட்கள் நீட்டிக்கப்படுகிறது. இரு சக்கர வாகனத்திற்கான மானியம் பெற கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் படிவத்தினை பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்ற பின்னரே பயனாளி இரு சக்கர வாகனம் வாங்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நீலகிரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 15.07.2026ம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு அவர்கள் தெரிவித்துள்ளார்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார்; மாநில துணைப் பொதுச் செயலாளர் பெருமாள் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.தேர்தல் செலவின நிதியை உடனடியாக வழங்குதல், சான்றிதழ் நடைமுறையில் மாற்றம் செய்யக்கூடாது, விடுமுறை நாட்களில் அரசு நிகழ்ச்சிகளை தவிர்க்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.




■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், உயர்கல்வியில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு உதவிடும் நோக்கில் நடைபெற்ற "கல்விக் கடன் முகாமில்" பங்குபெற்ற மாணவர்களில் அனைத்து விவரங்களுடன் தயார் நிலையில் இருந்த 3 மாணவர்களுக்கு ரூ.11.29 இலட்சம் மதிப்பிலான கல்விக் கடன் உதவிக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (09.07.2026) அன்று வழங்கினார். உடன் முதன்மைக் கல்வி அலுவலர் இரா.புண்ணியகோட்டி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விஜயகுமார், மாவட்டக் கல்வி அலுவலர்கள் சத்தியபிரபா, ந.ராஜன், உயர்கல்விச் சேர்க்கைக்கான கல்லூரிப் பொறுப்பாளர்கள், உதவித் திட்ட அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோர் உள்ளனர்

# திமுக தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன் திடீர் மயக்கம்: மதுரை தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை

மதுரை, ஜூலை.11-

திமுக நிர்வாகியும், திரைப்பட தயாரிப்பாளருமான பூச்சி முருகன், தனது நண்பர்களுடன் கொடைக்கானல் சென்றிருந்தபோது, உடல் நலம் பாதித்து திடீரென்று மயக்கமடைந்துள்ளனர். சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மேல் சிகிச்சைக்காக அவர் தனி விமானம் மூலம் சென்னைக்கு இன்று மதியம் கொண்டு செல்லப்படுகிறார். சென்னையில் திமுக கட்சி அலுவலகமான அறிவாலயத்தில் தலைமை நிலையச் செயலாளராக இருப்பவர் பூச்சி முருகன். திரைப்பட நடிகர், தயாரிப்பாளராகவும், திரைப்பட நடிகர் சங்கத்திலும் முக்கிய நிர்வாகியாகவும் இருந்து வருகிறார்.திமுக தலைவர் ஸ்டாலின் குடும்பத்துடன் வெளிநாடு பயணம் சென்ற நிலையில் சிறிது ஓய்வுக்காக கடந்த இரண்டு நாளுக்கு முன்பு திமுக முன்னாள் எம்பி ஆர்.எஸ்.பாரதி, மதுரையைச் சேர்ந்த திமுக கவுன்சிலர் சுதன் உள்ளிட்ட



சில நண்பர்களுடன் கொடைக்கானலுக்கு சுற்றுலா சென்றிருந்தார்.

அங்கு அவர்கள் அறையில் தங்கி இருந்தபோது, நேற்று மதியத்திற்கு மேல் திடீரென பூச்சி முருகனுக்கு தலைவலி, தலைச்சுற்றல் ஏற்பட்டு மயங்கி விழுந்துள்ளார். உடனிருந்த திமுக நிர்வாகிகள், கொடைக்கானல் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து, அவரை கார் மூலம் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்க உடனடியாக கொண்டு வந்து சேர்த்துள்ளனர். மருத்துவர்கள் அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு மூளைக்கு செல்லும் ரத்தக் குழாயில் ரத்தக் கசிவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து அவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு ரத்தக் கசிவை தடுப்பதற்கான தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.தகவல் அறிந்த பூச்சிமுருகனின் மகன் மற்றும் குடும்பத்தினர், திரைப்பட நடிகர் சங்க நிர்வாகிகள் நேற்று காலை சென்னையில் இருந்து மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு வந்தனர். முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி உள்ளிட்ட உள்ளூர் திமுகவினரும் மருத்துவமனைக்குச் சென்றனர்.இந்நிலையில் அவரை சென்னையிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை வழங்க அவரது குடும்பத்தினர், திரைப்பட நடிகர் சங்க நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர்.

அதன் அடிப்படையில் அவரை டிஸ்சார்ஜ் செய்து இன்று மதியம் ஆம்புலன்ஸில் மதுரை விமான நிலையத்திற்கு கொண்டு சென்று, பிறகு அங்கு இருந்து தனி விமான மூலம் சென்னைக்கு அழைத்து சென்று சிகிச்சை வழங்க உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஊழல் வழக்குகளில் ஐஏஎஸ் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - லஞ்ச ஒழிப்பு துறையில் வழக்கறிஞர் மோகன் தாஸ் புகார்

சென்னை, ஜூலை.11-

சென்னை ஆலந்தூரில் அமைந்துள்ள லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத் துறை (ஞிக்ஷிகிசி) இயக்குநர் அலுவலகத்தில், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மோகன் தாஸ் வெள்ளிக்கிழமை நேரில் ஆஜராகி, முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் C.விஜயபாஸ்கர் தொடர்பான ஊழல் வழக்கில் தன்னிடம் உள்ளதாகக் கூறப்படும் கூடுதல் ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், கொரோனா காலத்தில் அரசு மருத்துவ மனைகளுக்காக மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கொள்முதல்



செய்யப் பட்டதில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக லஞ்ச ஒழிப்பு துறை ஏற்கனவே முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் மீது வழக்குப்பதிவு செய்துள்ளது என்றார்.அந்த வழக்கில் கொள்முதல் டெண்டர் ஆவணங்களில் கையெழுத்திட்ட சுகாதாரத் துறை முன்னாள் செயலாளர் உமாநாத், ஐஏஎஸ் மீதும் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப் பட்டதாகவும், நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி இன்று லஞ்ச ஒழிப்பு துறையில் அதிகாரப்பூர்வ புகார் அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.அதேபோல், தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான மற்றொரு ஊழல் புகாரில், முன்னாள் மின்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், ஐஏஎஸ் மீதும் விசாரணை நடத்தி வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என தனியாக மனு அளித்துள்ளதாக கூறினார். முன்னாள் முதலமைச்சர்கள் ஜெயலலிதா மற்றும் கருணாநிதி ஆட்சிக் காலங்களில், ஊழல் புகார்களில் அமைச்சர்களுடன் தொடர்புடைய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிட்ட அவர், தற்போது அமைச்சர்கள் மீது மட்டுமே வழக்குப்பதிவு செய்யப்படுவதாக குற்றம்சாட்டினார்."ஊழல் என்பது ஒருவரால் மட்டும் நடைபெறக்கூடியது அல்ல. நிர்வாக அதிகாரிகளின் ஒப்புதலும், கையெழுத்தும், நிர்வாக நடவடிக்கைகளும் அதில் முக்கிய பங்காற்றுகின்றன. எனவே, அரசியல் நிர்வாகிகளுடன் சம்பந்தப்பட்ட ஐஏஎஸ் அதிகாரிகள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும், "ஊழலில் யார் ஈடுபட்டாலும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தமிழக முதல்வர் விஜய் சட்டப்பேரவையில் தெரிவித்திருந்தார். அந்த நிலைப்பாடு உயரதிகாரிகளுக்கும் சமமாகப் பொருந்த வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதால், ஐஏஎஸ் அதிகாரிகள் மீதும் உரிய விசாரணை நடத்தி தேவையானால் வழக்குப்பதிவு செய்து கைது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என மோகன் தாஸ் தெரிவித்தார்.






# இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவரும், நிறுவனருமான டாக்டர் ரமேஷ்பாபுஜி அவர்களின் பிறந்தநாள் விழா கோலாகலம்

குரோம்பேட்டை, ஜூலை.11-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவரும், நிறுவனருமான ரமேஷ்பாபுஜி அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு பேண்டு வாத்தியம் முழங்க நலதிட்ட பணி மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மாநில அமைப்பு செயலாளர் ரமேஷ் தலைமையில் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவரும், நிறுவனருமான டாக்டர் ரமேஷ்பாபுஜி அவர்களுக்கு மாநில அமைப்பு செயலாளர் ரமேஷ் மலர்மாலை மற்றும் சால்வை, அணிவித்து வாழ்த்து தெரிவித்து வெகு விமர்சியாக கொண்டாடினர். இதனை தொடர்ந்து நலதிட்ட உதவியான துப்புறவு பணியாளர்கள் 500 பேருக்கு வேட்டி, சேலை மற்றும் ஏழை, எளிய மக்கள் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கபட்டது. இதில் வடபழனி முருகன் கோயில் ஜமீன் மர்மயோகி மண் சித்தர், இந்து திராவிட மக்கள் கட்சி மற்றும் இந்து திருக்கோயில் பாதுகாப்பு கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

# தவெக அரசில் பாமக இடம்பெற்றால் விசிகவின் நிலை என்ன? அமைச்சர் வன்னி அரசு பதில்

கள்ளக்குறிச்சி, ஜூலை.11-

கள்ளக்குறிச்சி மாவட்ட வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கு வந்த சமூக நீதித்துறை அமைச்சர் வன்னிஅரசு நேற்று கள்ளக்குறிச்சியில் செய்தியாளர்களை சந்தித்தார்.அப்போது அவர் கூறியதாவது: ஆதிதிராவிடர் நலத்துறையை சமூக நீதித்துறையாக மாற்றியது தொடர்பாக விசிகவில் இருவேறு கருத்துகள் உள்ள



நிலையில், 'சமூக நீதித்துறையாக மாற்று வதனால் என்ன சாதகம்?' என்ற கேள்விக்கு, இங்கு நான் அரசியல் பேச விரும்பவில்லை. இது தொடர்பாக எங்கள் கட்சித் தலைவர் பேசுவார் என பதிலளித்தார்.தொடர்ந்து மேகேதாட்டு அணை கட்டுவது தொடர்பாக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்தது குறித்து எழுப்பிய கேள்விக்கு, "அவர் முதல்வராக இருந்த போது என்ன நிலை எடுக்கப் பட்டதோ, அதே நிலை தான் திமுக ஆட்சியிலும் தொடர்ந்தது.தற்போது தவெக அரசிலும் அதே நிலை தான் தொடர்கிறது. இதில் மாநில உரிமையை விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. இதுதொடர்பாக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, அனைவரும் ஆதரித்த னர். எனவே சட்டப்பேரவையில் ஒரு மாதிரியாகவும் பொது வெளியில் வேறு மாதிரியாகவும் பேசுவது மரபல்ல" என்றார்.தவெக அரசில் பாமக இடம் பெற்றால் விசிக நிலை என்ன என்ற கேள்விக்கு, "இதுகுறித்து பாமக தலைவர் தான் முடிவு செய்ய வேண்டும். முதல்வரை பொறுத்தவரை எங்களுக்கு சுதந்திரம் அளித்திருக்கிறார். நாங்கள் சுதந்திரமாக செயல்படுகிறோம்" என்றார்.

# கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் லஞ்சம் வாங்கிய முதுநிலை வருவாய் ஆய்வாளர் கைது

கள்ளக்குறிச்சி, ஜூலை.11-

கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வரும் ஆரோன் என்பவர் பட்டா மாற்றம் பரிந்துரை செய்ய ரூ.2500 லஞ்சம் வாங்கும் போது கையும் களவுமாக சிக்கியதால் கள்ளக்குறிச்சி லஞ்ச ஒழிப்பு போலீசார் பிடித்து கைது செய்தனர்

# வாணியம்பாடி அரசு பள்ளியில் மாணவர்கள் மோதல். 2 பேர் காயம். பள்ளி கழிவறையில் குட்கா, கூல் லிப் பாக்கெட்டுகள் கண்டெடுப்பு

வாணியம்பாடி, ஜூலை.11-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நியூடவுன் பகுதியில் செயல்பட்டு வரும் நகராட்சி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில், 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.9/07/2026 அன்று பள்ளி மதிய உணவு இடைவேளையின் போது, முன்விரோதம் காரணமாக 11 ஆம் வகுப்பு மாணவர்கள் மூவர் இணைந்து 12 ஆம் வகுப்பு மாணவர் ஒருவரை தாக்கியதாக கூறப்படுகிறது. காயமடைந்த மாணவரை ஆசிரியர்கள் மீட்டு சமரசம் செய்து, மாணவர்களை மீண்டும் வகுப்பறைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இதையடுத்து நடந்த சம்பவத்தை 12 ஆம்




வகுப்பு மாணவர் தனது சக மாணவர்களிடம் தெரிவித்ததாகவும், பின்னர் 8க்கும் மேற்பட்ட 12ஆம் வகுப்பு மாணவர்கள் சம்பந்தப்பட்ட 11ஆம் வகுப்பு மாணவர்களை பள்ளி கழிவறைக்கு அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர்.இந்த தாக்குதலில் கழிவறையில் இருந்த டைல்ஸ் மற்றும் பீங்கான் பொருட்கள் சேதமடைந்துள்ளது. மாணவர்களின் அலறல் சத்தம் கேட்டு ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் விரைந்து சென்று காயமடைந்தவர்களை மீட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். தாக்குதலின்போது கட்டை, தடி உள்ளிட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், மாணவர் ஒருவர் அணிந்திருந்த மோதிரத்தால் ஏற்பட்ட காயம் காரணமாக 11 ஆம் வகுப்பு மாணவரின் கன்னத்தில் ஐந்து தையல்கள் போடப்பட்டுள்ளது. தகவலறிந்த நகர காவல்துறையினர் பள்ளிக்கு சென்று விசாரணை நடத்தினர்.

இதற்கிடையில், பள்ளி மாணவர்களின் கழிவறையில் கூல் லிப், குட்கா உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களின் காலி பாக்கெட்டுகள் சிதறிக் கிடந்தது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பள்ளி வளாகத்தில் போதைப்பொருள் பயன்பாடு தொடர்பாக பெற்றோர்கள் கடும் கவலை தெரிவித்துள்ளனர். அரசுப் பள்ளி வளாகத்தில் மாணவர்களிடையே ஏற்பட்ட வன்முறை சம்பவமு ம், கழிவறையில் கண்டெடுக்கப்பட்ட போதைப்பொருள் பாக்கெட்டுகளும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. காவல்துறையும் கல்வித்துறையும் சம்பவம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றன

# கட்டணம் உயர்த்தப்பட்ட மினி பஸ்களுக்கு அபராதம் விதிப்பு

ஊட்டி, ஜூலை.11-

ஊட்டியில் திடீரென மினி பஸ்களில் கட்டணம் உயர்த்தப்பட்ட நிலையில் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி குன்னூர் கோத்தகிரி மற்றும் கூடலூர் ஆகிய பகுதிகளில் மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. ஊட்டியில் இருந்து எல்லநள்ளி, தங்காடு, தலைகுந்தா உட்பட பல்வேறு பகுதிகளுக்கும் மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், பெட்ரோல் டீசல் விலை உயர்வை காரணம் காட்டி சில மினி பஸ்களில் ரூ.2 முதல் 3 ரூபாய் வரை கட்டண முயர்த்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. மினி பஸ்களுக்கு கட்டணம் உயர்த்த வேண்டும் எனில் அதற்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும். ஆனால் மினி பஸ் உரிமையாளர்கள் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டணங்களை உயர்த்தீராக தெரிகிறது. இந்நிலையில் வட்டார





போக்குவரத்து அலுவலர் பிரபாகரன் தலைமையில் அதிகாரிகள் ஊட்டி ஏடிசி பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர் அப்போது அவர்கள் பொதுமக்களிடம் கட்டணம் உயர்த்தி வாங்கியது தெரியவந்துள்ளது. இதனை தொடர்ந்து கட்டணம் உயர்த்தி வாங்கிய 9 மினிபஸ் களுக்கு தலா ரூ.10,000 வீதம் அபராதம் நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் அந்த மினி பஸ்களில் பயன்படுத்தப்பட்ட தடை செய்யப்பட்ட ஏர் ஹாரன்களும் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் தடை செய்யப்பட்ட ஏர் ஆர் இன் பயன்படுத்திய அரசு போக்குவரத்து கழக பஸ்ஸில் இருந்தும் பறிமுதல் செய்யப்பட்டது. தொடர்ந்து கட்டணங்கள் உயர்த்தி வாங்கினால் உடனடியாக தகவல் தெரிவிக்கவும் பொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

# தேனி மாவட்டம் க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.745.22 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு

மயிலாடும்பாறை, ஜூலை.11-

தேனி மாவட்டம், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் , க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கண்டமனூர் ஊராட்சியில் ரூ.18.42 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதே பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறைக் கட்டடத்தைப் பார்வையிட்டு, பணிகள் முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளதையொட்டி





நடப்பு கல்வி ஆண்டில் மாணவர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, கண்டமனூர் ஊராட்சியில் உள்ள வைகை ஆற்றுப்பகுதியில் ரூ32.15 இலட்சம் மதிப்பீட்டில் நீரேற்றும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதைப் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார், அதனை த்தொடர் ந்துஆத்தங்கரைப்பட்டி ஊராட்சியில் ரூ.8.35 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் உடன் கூடிய நடைபாதை அமைக்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கடமலைக்குண்டு ஊராட்சிக்குட்பட்ட கரட்டுப்பட்டி கிராமத்தில் ரூ.3.2 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் புனரமைப்பு மற்றும் சாய்வு தளம் அமைக்கும் பணி முடிவுற்றள்ளதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், முத்தாலம்பாறை ஊராட்சியில் உப்புத்துறைகிராமத்தில் ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் இணைப்புப் பணிகள், ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி, ரூ. 5.25 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம், மேலும் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் சோலார் மின்விளக்கு அமைக்கும் பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மயிலாடும்பாறை ஊராட்சியில் ரூ.577.60 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை உரிய காலத்தில் முடித்திட அலுவலருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்தும யிலாடும்பாறை ஊராட்சியில் முன்னோடி விவசாயி ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பட்டுவளர்ப்புக்கூடம் அமைக்கப்பட்டு வருவதை பார்வையிட்டதுடன், பயனாளி யிடம் பணிகளை விரைந்து முடிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுரை வழங்கி னார்.இந்த ஆய்வின்போது, க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீதாராமன் .வினோத்குமார், வட்டார வளர்ச்சி அலுவலகப் பொறியாளர்கள் .கார்த்தி, முத்துக்கனி உட்பட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ஆண்டிபட்டி அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஜூலை 31ஆம் தேதி வரை நேரடி மாணவியர் சேர்க்கை : விண்ணப்பங்கள் வரவேற்பு

தேனி, ஜூலை.11-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, ஆண்டிபட்டி அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஜூலை 31 ஆம் தேதி வரை நேரடி மாணவியர் சேர்க்கை நடைபெற உள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் பயில்வதற்கு 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் கணிணி இயக்குபவர் மற்றும் திட்டமிடுதல் உதவியாளர் (COPA), ஸ்மார்ட்போன் டெக்னிசியன் மற்றும் ஆப்டெஸ்டர் (Smart-phone Technicion cum App Tester), குளிர் பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுபடுத்தும் தொழில்நுட்பவியலாளர்




(RACT) ஆகிய தொழிற்பிரிவுகளு க்குவி ண்ணப்பிக்கலாம்இவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித்தொகைரூ750/விலையில்லா சீருடைகள், காலணிகள், பாடபுத்தகங்கள் வரைபட உபகரணங்கள், மிதிவண்டி. Buss pass முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சி கட்டணம் ஏதும் இல்லை. மேலும் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்த மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தில் ரூ.1000/மாதந் தோறும்ஊக்கத்தொகையாக வழங்க ப்படும். சேர்க்கையில் கலந்து கொள்ள வரும் மாணவிகள் அசல் மதிப்பெண் சான்று, மாற்றுச்சான்று, ஜாதிசான்று, ஆதார் நகல், வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு போட்டோவுடன் நேரில் வந்து தாம் விருப்பும் தொழிற்பிரிவை தேர்வு செய்து சேர்க்கை பெறலாம்.மேலும் விபரங்களுக்கு ஆண்டிபட்டி மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை 9500483620, 9499055770 என்ற கைப்பேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்துக் கொள்ளலாம் என மாவட்டஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.



■ தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், பாலகோம்பை ஊராட்சியில் முத்தாலம்மன் கோவில் தெரு (1, 2, 3) மற்றும் மேற்கு தெரு ஆகிய பகுதிகளில் கழிவுநீர் முறையாகச் செல்ல வழியின்றி, சாலையில் கழிவுநீர் தேங்குவதாக வரப்பெற்ற புகாரின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித்லைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவின்பேரில், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் சார்பில், தற்சமயம் கழிவுநீர் தேங்காதவாறு மண் மேவப்பட்டு, சீர்செய்யப்பட்டுள்ளது. மேலும், பாலகோம்பை ஊராட்சிக்குட்பட்ட முத்தாலம்மன் கோவில் தெரு (1,2,3) மற்றும் மேற்கு தெரு ஆகிய தெருக்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS 202324) கீழ் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட தெருவில் நிரந்தர தீர்வாக VB-GRAM G திட்டத்தின் கீழ் சமுதாய உறிஞ்சுகுழி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தெலங்கானா விடுதியில் கிச்சடி சாப்பிட்ட 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதி!

நாகர்கர்னூல், ஜூலை.11-

தெலங்கானாவில் உள்ள பழங்குடியின சிறுவர் விடுதியில், காலையில் வழங்கப்பட்ட உணவைச் சாப்பிட்ட 40க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. உணவு நச்சுத்தன்மையாக மாறியதே இதற்கு காரணம் என சந்தேகிக்கப்படுகிறது.

நேற்று காலை தெலங்கானாவில் உள்ள பள்ளி விடுதியில் மாணவர்களுக்கு காலை உணவாக கிச்சடியும், சட்னியும் வழங்கப்பட்டன. உணவைச் சாப்பிட்ட சிறிது நேரத்திலேயே, பள்ளி வழிபாட்டுக் கூட்டத்தின் போது சில மாணவர்களுக்கு வாந்தி ஏற்பட்டது. பலருக்கு கடுமையான வயிற்று வலியும் உண்டானது.

இதனைப் பார்த்த பள்ளி ஊழியர்கள் உடனடியாக மருத்துவக் குழுவினருக்குத் தகவல் கொடுத்தனர். விடுதியில் குடிநீர் பற்றாக்குறை இருந்ததாகவும், இதனால் அடுத்தடுத்து மாணவர்கள் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டதாகவும் சுகாதாரக் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் முதலில் மன்னனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு முதலுதவி பெற்றனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அச்சம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். "மாணவர்கள் அனைவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது அனைவரது உடல்நிலையும் சீராக உள்ளது, யாரும் பயப்படத் தேவையில்லை" மருத்துவர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் சாப்பிட்ட உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதனைக்காக ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. நாகர்கர்னூல் மாவட்ட அதிகாரிகள் மருத்துவமனைக்கு நேரில் சென்று மாணவர்களிடம் நலம் விசாரித்தனர். சிகிச்சைக்குப் பின் மாணவர்கள் குணமடைந்து வருவதால், விரைவில் அவர்கள் விடுதிக்கு திரும்புவார்கள் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது




■ கிருஷ்ணகிரியில் நடைபெற்ற தமிழக விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டத்தில், மா உற்பத்தியாளர்களுக்கு கிலோவுக்கு ரூ.2 மானியம் அறிவித்த மத்திய, மாநில அரசுகளின் முடிவை மாநில தலைவர் இராமகவுண்டர் வரவேற்றார்.அதேவேளையில், ஆந்திரா மாநிலத்தைப் போல நியாயமான கொள்முதல் விலை நிர்ணயம் செய்து, கிருஷ்ணகிரியில் மூடப்பட்டுள்ள மாங்கூழ் தொழிற்சாலைகளை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.மேலும், மானியம் வழங்கும் நடைமுறையை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்றும், சீசன் முடிவடைந்த நிலையில் தாமதமாக அறிவிக்கப்பட்டதால் விவசாயிகள் முழுமையாக பயனடையவில்லை என்றும் தெரிவித்தார்.





# தாம்பரம் சட்டமன்ற தொகுதி தாவெக வேட்பாளர் வெற்றி பெற்றதை வாக்காளர்களுக்கு அமைச்சர் சரத்குமார் நன்றி தெரிவித்தனர்

தாம்பரம், ஜூலை.11-

செங்கல்பட்டு வடமேற்கு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்ட சரத்குமார் வெற்றி பெற்று எம்.எல்.ஏ.வானார். மேலும் மனிதவள மேலானதுறை அமைச்சராக பொறுப்பேற்றார். தனக்கு வாக்களித்த வாக்களர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பதுவஞ்சேரி மாடம்பாக்கம் பகுதி கழகச் செயலாளர் பா.நாகராஜ் தலைமையில் 69வது வட்டக் கழக நிர்வாகி ஆர்.ஜெகன் ஏற்பாட்டில் 69வது வார்டு தெருக்களில் சென்று திறந்த வெளி ஜீப்பிலும், நடந்து சென்றும் நன்றி தெரிவிக்க வரும்போது 69வது வார்டு கரிகாலன் தெருவை சேர்ந்த தாவெக நிர்வாகி வெ.முகேஷ் குமார் அமைச்சருக்கு ஆர்த்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டதுஅதனைத் தொடர்ந்து காருக்கு கழக கொடி போட்டுவிட்டு வாழ்த்துக்கள் தெரிவித்து வீடு வீடாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தனர் இந்நிகழ்ச்சியில் மாடம்பாக்கம் பகுதி கழக நிர்வாகிகள் 69வது வார்டு நிர்வாகி கள், மகளிர் அணி மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# நீலகிரி மாவட்ட தோட்டகலை துறை சார்பில் மண் மாதிரி சேகரிப்பு விழிப்புணர்வு முகாம்கள்

நீலகிரி, ஜூலை.11-

நீலகிரி மாவட்டத்தில் காரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு போன்ற காய்கறி பயிர்களும், தேயிலை, காபி போன்ற தோட்டப்பயிர்களும் மற்றும் பல்வேறு வகையான பழப்பயிர்களும் பயிரிடப்படுகின்றன. மண் வளத்தை பாதுகாக்கவும், அதிக மகசூல் பெறவும் தரமான விளை பொருட்கள் உற்பத்தி செய்வதன் மூலம் அதிக இலாபத்தை ஈட்டவும் விவசாயிகள் விளைநிலங்களில் மண் பரிசோதனை மேற்கொண்டு சமச்சீர் உரமிடுவது மிகவும் அவசியமாகும்.உதகை தோட்டக்கலை இணை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மண் ஆய்வு கூடம் மூலமாக ரூ.30/ ஆய்வு கட்டணத்தில் மண் ஆய்வு செய்து மண்ணிலுள்ள கார அமில நிலை, அங்கக கரிம சதவீதம், பேரூட்ட சத்துக்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்களின் அளவும், அடுத்த பயிருக்கு தேவையான உர பரிந்துரைகளும் மண் வள அட்டை மூலம் வழங்கப்படுகிறது.விவசாயிகள் மண்ணை ஆய்வுக்கு கொடுக்கும்போது பயிர்களுக்கு ஏற்ப மண் மாதிரி சேகரித்தலை மிகவும் கவனமாக மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக, தோட்டக்கலை இணை இயக்குநர், உதகை அவர்களின் அறிவுரையின் படி மண் மாதிரி சேகரிப்பு விழிப்புணர்வு முகாம்கள் வரும் 13.07.2026 அன்று நடுஹட்டி2, கோத்தகிரி மற்றும் இத்தலார் கிராமம், உதகையிலும், 14.07.2026 அன்று அதிகரட்டி, குன்னூரிலும், 15.07.2026 அன்று தேவாலா, கூடலூரிலும், 20.07.2026 அன்று கோத்தகிரி1, 29.07.2026கேத்தி3 குன்னூர் மற்றும் 29.07.2026 அன்று பாலகொலா, உதகையிலும் தோட்டக்கலை உதவி இயக்குநர், மண் ஆய்வுக்கூடம் உதகை அவர்களால் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.அது சமயம் இப்பகுதிகளை சேர்ந்த விவசாய பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு மண் மாதிரி சேகரிப்பு வழிமுறையினை தெரிந்து கொண்டு தங்களது விளை நிலத்தின் மண்ணை ஆய்வுக்கு கொடுத்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆய்வு முடிவுகள் அடிப்படையில் பரிந்துரைகளை பின்பற்றி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உர

முகாம் தொடர்பாக விளக்கங்கள் தேவைப்பட்டால் குன்னூர் விவசாயிகள் 9487966179 என்ற எண்ணிலும், உதகை மற்றும் கூடலூர் விவசாயிகள் 8940022593 என்ற எண்ணிலும், கோத்தகிரி விவசாயிகள் 9787488185 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ள கேட்டு கொள்ளப்படுகிறார்கள்



# 100 நாள் வேலைத் திட்டப் பணிகள் கோரி படமாத்தூர் கிராம மக்கள் மனு

சிவகங்கை, ஜூலை .11-

சிவகங்கை மாவட்டம் படமாத்தூர் கிராமத்தில் கடந்த ஏழு மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் (100 நாள் வேலைத் திட்டம்) கீழ் கண்மாய் உள்ளிட்ட பணிகள் ஒதுக்கப்படாததால், அப்பகுதி மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.சுமார் 160 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேலைவாய்ப்பு இன்றி அவதிப்பட்டு வருவதாகவும், இதுகுறித்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பலமுறை புகார் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் குற்றம்சாட்டினர். இதையடுத்து, 20க்கும் மேற்பட்ட கிராமப் பெண்கள், வழக்கறிஞரும் சமூக ஆர்வலருமான படமாத்தூர் பாரதி தலைமையில், மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்து, தங்கள் கிராமத்திற்கு உடனடியாக 100 நாள் வேலைத் திட்டப் பணிகளை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.





# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்த ஆட்சியர்

சிவகங்கை, ஜூலை .11-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு, மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தலைமை தாங்கினார். கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று, விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் குறைகளை மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக மனுக்களாக அளித்தனர். மனுக்களை பெற்றுக் கொண்ட ஆட்சியர், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, விவசாயிகளின் கோரிக்கைகளை விரைந்து தீர்க்குமாறு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு. எஸ். செல்வசுரபி, இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மை) சங்கர லெட்சுமி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வேளாண்மை இயக்குநர் உமா மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கமிலஸ் லீமா ரோஸ், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் தே. ஜெஃபி கிரேசியா உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., மனுக்களை பெற்றுக்கொண்டு குறைகளை கேட்டறிந்தார்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் யோனெக்ஸ் சன்ரைஸ் அகில இந்திய சப்ஜூனியர் (15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான) இறகுபந்து தரவரிசைப் போட்டி 2026யில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த செல்வன் எம்.எஃப்.தாபின் அனுப் அஹமது அவர்கள் ஆண்கள் ஒற்றையர் பிரிவு, இரட்டையர் பிரிவு மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் தங்கம் வெற்றுள்ளதையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் .ரகுகுமார் உள்ளார்.



■ மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், சின்னச்சொக்கிகுளத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் சந்தை பிரிவு வாழ்வாதார செயல் திட்டம் சார்பில் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள மகளிர் மதி அனுபவ அங்காடி அமைப்பதற்கும், மற்றும் புதிய மதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கட்டடம் அமையவுள்ள இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா,பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# எதிர்காலத்தில் பெட்ரோல், டீசல் தேவையில்லையா.! ஹைட்ரஜன் தான் எதிர்காலம்.. ஒன்றிய அமைச்சர் கருத்து

டெல்லி, ஜூலை.11-

ஹைட்ரஜன் தான் இந்திய போக்குவரத்து துறையின் எதிர்காலம் என்று ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி உறுதிபட தெரிவித்து உள்ளார். சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்த எரிபொருள் மாற்றத்தை ஊக்குவிக்க, தற்போது இந்தியாவின் 10 முக்கிய வழித்தடங்களில் ஹைட்ரஜன் வாகனங்களின் சோதனை ஓட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் கூறி இருக்கிறார்.இது குறித்து நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அமைச்சர் நிதின் கட்கரி, புனேமும்பை, கிரேட்டர் நொய்டாடெல்லி ஆக்ரா, அகமதாபாத் வதோதராசூரத் மற்றும் திருவனந்தபுரம்கொச்சி உள்ளிட்ட இந்தியாவின் 10 முக்கிய நெடுஞ்சாலைகளில் இந்த முன்னோடி சோதனைகதிட்டங்கள் தீவிரமாக நடந்து வருவதாக குறிப்பிட்டார்.தொடர்ந்து பேசிய அமைச்சர் நம் நாட்டினுடைய போக்குவரத்துத் துறையின் எதிர்காலம் ஹைட்ரஜன் எரிபொருள் தான் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். எனவே அதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம் என்றார். மாற்று எரிபொருள் மற்றும் உயிரி எரிபொருள் (biofuel) தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் நம் நாட்டின் வாகனத் துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டு வருகிறது. புத்தாக்கம் மற்றும் செலவுச் சிக்கனத் திறன் ஆகிய இரண்டிலும் இந்தியா உலக அளவில் முன்னணியில் திகழும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள், கட்டுப்படியாகும் விலையில் வாகனங்களை வழங்குவதோடு, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பயணிகளின் வசதியை மேம்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வலியுறுத்தினார்



# மறுமதிப்பீட்டில் மதிப்பெண் உயர்வு: மாநில 3ஆம் இடம் பிடித்த சி.இ.ஓ.ஏ. பள்ளி மாணவி ஹர்சிதா!

மதுரை, ஜூலை.11-

10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் மறுமதிப்பீட்டு முடிவில், மதுரை சி.இ.ஓ.ஏ. பள்ளி மாணவி ஹர்சிதா 500 க்கு 497 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் 3ஆம் இடத்தைப் பிடித்து பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

ஏற்கனவே இப்பள்ளி மாணவி சாய் சஞ்சனா 497 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் 3 ஆம் இடத்தையும், மாவட்ட அளவில் முதல் இடத்தையும் பெற்றிருந்த நிலையில், மறுமதிப்பீட்டின் மூலம் ஹர்சிதாவும் அதே சாதனையை நிகழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.மேலும், மறுமதிப்பீட்டு முடிவில் சி.இ.ஓ.ஏ. பள்ளியைச் சேர்ந்த 27 மாணவ, மாணவியர்களின் மதிப்பெண்கள் உயர்ந்துள்ளன. 2025ரூ 26 கல்வியாண்டு 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சி.இ.ஓ.ஏ. பள்ளி மாணவர்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று, மாவட்டத்தின் முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றி சாதனை படைத்திருந்தனர்.இந்த வெற்றிப் பயணம் வரும் கல்வியாண்டுகளிலும் தொடரும் என்ற நம்பிக்கையை பள்ளித் தலைவர் இ. சாமி தெரிவித்தார்.மறுமதிப்பீட்டின் மூலம் மாநில அளவிலான புதிய சாதனையைப் படைத்த மாணவி ஹர்சிதாவை பள்ளித் தலைவர் இ. சாமி, துணைத் தலைவர்கள், தாளாளர்கள், பள்ளி முதல்வர்கள் கலா, மஞ்சுளா மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# மகாராஷ்டிராவில் ஆற்றில் மிதந்து வந்த 3,000 சிலிண்டர்கள்

ராய்காட், ஜூலை.11-

மகாராஷ்டிராவின் ராய்காட் பகுதியில் வெள்ளத்தில் எரிவாயு சிலிண்டர்கள் மிதந்து வந்த வீடியோ மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவற்றை வீடுகளுக்கு எடுத்துச்சென்று பயன்படுத்த வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.மகாராஷ்டிராவில் பெய்து வரும் கனமழை காரணமாக, ஹெச்பிசிஎல் பாதாளகங்கா எல்பிஜி சிலிண்டர் நிரப்பும் ஆலையின் பாதுகாப்புச் சுவர் திடீரென இடிந்து விழுந்தது. இதனால், வெள்ள நீர் நேரடியாக ஆலைக்குள் புகுந்தது.இதன் விளைவாக, ஆலை வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 3,000 எரிவாயு சிலிண்டர்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு, பாதாளகங்கா ஆறு மற்றும் கர்பாடா ஓடையில் தத்தளித்தபடி மிதக்கத் தொடங்கின. இந்த விநோதமான காட்சியை பாலத்தின் மீது நின்றபடி பொதுமக்கள் பலரும் தங்களது மொபைல் போன்களில் ஆச்சரியத்துடன் வீடியோவாகப் பதிவு செய்து சமூகவலைதளங்களில் வெளியிட்டதால், பொதுமக்கள் மத்தியில் ஆர்வம் அதிகமானது.

இதையடுத்து, ராய்காட் மாவட்ட ஆட்சியர் கிஷன் ஜாவ்லே கூறுகையில், ”ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட இந்த சிலிண்டர்கள் சிலவற்றில் எரிவாயு நிரப்பப்பட்டிருக்கலாம். பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. எனவே, பொதுமக்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்த முயற்சிக்க வேண்டாம். மீட்கப்படும் எரிவாயு சிலிண்டர்களை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமோ அல்லது நிறுவனத்திடமோ ஒப்படைக்க வேண்டும்.

இந்த சிலிண்டர்களை நேரடியாக ஹெச்பிசிஎல் நிறுவன வளாகம், அருகில் உள்ள ஹெச்பிசிஎல் விநியோகஸ்தர், கிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலகம், பிற வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்” என்றார்.

# பொது விநியோகத் திட்ட சேவைகள் குறித்த மக்கள் குறைதீர் முகாம்

மதுரை, ஜூலை.11-

மதுரை மாவட்டத்தில், பொது விநியோகத் திட்ட சேவைகள் குறித்த மக்கள் குறைதீர் முகாம் வருகின்ற 11.07.2026 அன்று குடிமைப் பொருள் வட்டாட்சியர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களில் முற்பகல் 10.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. மேற்படி முகாமில் புதிய குடும்ப அட்டை விண்ணப்பிக்க, குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், பெயர் திருத்தம், முகவரி மாற்றம் / நகல் அட்டை கோருதல் / கைப்பேசி எண்பதிவு / மாற்றம், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை குறைபாடுகள் குறித்து புகார்கள் மற்றும் இதர குறைகள் தொடர்பான மனுக்களை பொதுமக்கள் நேரடியாக முகாம் அலுவலரிடம் வழங்கி தீர்வுகள் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தெரிவித்துள்ளார்.



■ அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமி தலைமையில், கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு உட்பட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், சென்னை தலைமைக் கழகமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அசோக்குமார், எடப்பாடி பழனிசாமிக்கு பூங்கொத்து வழங்கி வரவேற்றார். நிகழ்வில் அதிமுக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி. முனுசாமி உள்ளிட்ட மூத்த நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தொகுதி மறுசீரமைப்பை ஏற்க மாட்டோம் முதல்வர் விஜய்

கரூர், ஜூலை.11-

அரசியலுக்கு வந்ததில் இருந்து தன்னை ஒரு கூட்டம் குறை சொல்லி கொண்டே இருப்பதாக கரூரில் முதல்வர் விஜய் பேசி இருக்கிறார். கரூர் சம்பவத்தின் நினைவாக தவெக சார்பில் ஒரு நினைவு சின்னம் அமைக்கப்படும் என்று கூறி இருக்கிறார்.ஒரு மனிதன் எவ்வளவு உயரத்துக்கு சென்றாலும் மனதளவில் சில காயங்கள், வலிகளை மறக்க முடியாது எனக்கு அனைத்தையும் விட வலியும், காயமும் ஏற்படுத்தியது கரூர் சம்பவம் தான் என்று பேசி இருக்கிறார். கரூரில் கூட்டம் அதிகமாம் இருக்கிறது என அப்போதைய காவல்துறை எங்களை எச்சரிக்கவில்லை என்றும் கூட்டம் அதிகமாக இருந்தால், எங்களை கேட்காமலேயே கூட்டத்தை ரத்து செய்திருக்கலாமே என்றும் விஜய் கூறி உள்ளார்.யார் என்ன செய்தாலும் மக்களை விட்டு நான் ஓட மாட்டேன், இத்தனை வலி, காயங்களை கொடுத்து விட்டு பழியை தூக்கி என்மீதே போடுகிறார்கள். வலியோடு இருக்கும் என்னை ஏளனமாக பேசுகிறார்கள். தவெக ஆட்சியில் எங்கும் லஞ்சம் இல்லை, லஞ்சம் ஒழிந்து மக்கள் நிம்தியாக இருக்கிறார்கள் என்றார். அதே போல தொகுதி மறுசீரமைப்பை தவெக அரசு ஏற்று கொள்ளாது என்றும் குறிப்பிட்டார். பணமா, ஜனமா என்றால் எனக்கு எப்போதுமே ஜனம் தான் முக்கியம் என்றும் பேசி இருக்கிறார். அண்ணா பிறந்தநாள் அன்று தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம் துவக்கி வைக்கப்பட உள்ளது. எனவே நான் ரீல் தாய்மாமன் இல்ல... ரியல் தாய்மாமன் என்றும் விஜய் பேசி கூட்டத்தினரிடம் கைதட்டல் பெற்றார்




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161